
www.padippakam.com

# ஏழைதாசன்

-திங்கள் இலக்கிய இதழ்-

| | |
|---|---|
| ★ 8-10<br>★ ஜுன் '2000<br>★ விலை ரூ.3/- | ★ எல்லோரும்<br>எல்லாமும்<br>பெற வேண்டும்.<br>*-கண்ணதாசன்* |

## 'தமிழ் மறை திருக்குறள்' நூல் வெளியீட்டு விழா



பிரதமரின் அறிவியல் ஆலோசகர் **ஏ.பி.ஜே. அப்துல்கலாம்** நூலை வெளியிட, பெறுகிறார் கேரள திருவள்ளுவர் ஞானபீட மடபதி **சிவானந்தர்.** உடன் (இடமிருந்து) **பேராசிரியர் தமிழண்ணல்** அறக்கட்டளையின் இந்திய ஒருங்கிணைப்பாளர் **முனைவர் தமிழப்பன்** அறக்கட்டளை இயக்குநர் **அழகப்பா ராம்மோகன்.**
(விரிவான செய்தி உள்ளே.....)

படிப்பகம்

ஒலிபரப்புச்செய்தி

www.padippakam.com

## வெளிநாட்டு வானொலி தமிழ் ஒலிபரப்புகள்

| காலம் | நேரம் | நிலையத்தின் பெயர் | அலைவரிசை |
|---|---|---|---|
| அதிகாலை | 5.00 - 7.00 | மலேசிய வானொலி | 60 |
| | 3.30 - 6.30 | சிங்கப்பூர் வானொலி | 41,19 |
| | 3.00 - 8.00 | ஐ.பி.சி. தமிழ், லண்டன் | 19 |
| | 5.30 - 6.30 | டிரான்ஸ் உலக வானொலி | 882 |
| | 5.30 - 12.00 | வானம்பாடி, இலங்கை | 855 |
| காலை | 6.00 - 6.25 | வெரித்தாஸ், பிலிப்பைன்ஸ் | 25 |
| | 6.30 - 6.50 | வாத்திகான் வானொலி | 81,11 |
| | 6.30 - 7.30 | பீபா வானொலி | 25,81 |
| | 7.00 - 10.00 | சர்வதேச சேவை, இலங்கை | 882 |
| | 9.30 - 10.30 | Cjmr வானொலி, கனடா | 1320 |
| நண்பகல் | 12.00 - 13.00 | ராசல்கைமா, துபாய் | 1152 |
| | 12.00 - 7.30 | வானம்பாடி, இலங்கை | 885 |
| | 2.15 - 2.30 | பாகிஸ்தான் வானொலி, கராச்சி | 19,25 |
| | 2.30 - 3.15 | பீபா வானொலி, அமெரிக்கா | 19 |
| | 3.00 - 7.00 | சர்வதேச சேவை, இலங்கை | 882 |
| மாலை | 4.00 - 5.00 | பாகிஸ்தான் வானொலி, கராச்சி | 22,19 |
| | 4.00 - 8.30 | மலேசிய வானொலி | 60 |
| | 4.00 - 11.00 | சிங்கப்பூர் வானொலி | 41,19 |
| | 5.00 - 6.00 | TRT தமிழ், பி[illegible]ன்ஸ் | 16 |
| | 5.00 - 7.00 | ஆசிய சேவை, இலங்கை | 11,25 |
| | 6.00 - 7.00 | மாஸ்கோ வானொலி, ரஷ்யா | 25,41,49 |
| | 6.00 - 8.00 | TBC தமிழ், லண்டன் | 16 |
| | 6.30 - 7.30 | கண்டி தமிழ்ச்சேவை | 532 |
| | 7.00 - 7.15 | பீபா செசல்ஸ் | 25 |
| | 7.30 - 7.45 | விஸ்வவானி | 25 |
| | 7.30 - 8.00 | வெரித்தாஸ், பிலிப்பைன்ஸ் | 31 |
| | 7.30 - 8.30 | பீஜிங் வானொலி, சீனா | 19,25,31 |
| | 8.05 - 8.45 | டி.ஆர். இலங்கை | 882 |
| | 8.30 - 9.00 | ஐ.பி.சி. தமிழ், லண்டன் | 16 |
| | 8.30 - 9.00 | AWR அமெரிக்கா | 19 |
| | 8.40 - 9.00 | வாத்திகான் வானொலி | 19,25 |
| | 9.15 - 9.45 | பி.பி.சி. தமிழோசை, லண்டன் | 24,41,49 |
| | 10.00 - 10.30 | பீபா வானொலி, அமெரிக்கா | 25,81 |

உலகத் தமிழ் இளைஞர்களை ஒன்றிணைக்கும் ஜேர்மனியின் முதலாவது இணைய வானொலியின் பரீட்சார்த்த ஒலிபரப்புகள் ஆரம்பமாகி விட்டன!

**TIR ( Tamil Internet Radio)**

படிப்பகம்

# பல்லாண்டு வாழட்டும்!

www.padippakam.com

ஏழைகள் வாழவும் ஏழ்மை ஒழியவும்
ஏனைய திட்டங்கள் தந்தவன் — சில
கோழைகள் இங்கே கேலியு ரைத்திட
கேட்டு ரசித்து மகிழ்பவன்.

வீடின்றி வீதியில் வாழ்கின்ற மக்களின்
விழியோர ஈரத்தைத் துடைப்பவன் — ஒரு
கேடின்றி வாழ்ந்திட ‘வருமுன்னே காப்போம்’
திட்டத்தை உருவாக்கித் தந்தவன்.

‘சமத்துவ புரமும்’ ‘உழவர் சந்தை’யும்
சரித்திர ஏட்டில் .வரைந்தவன் — சரி
சமமாய் வாழ்ந்திட உயர்குண நோக்கில்
சாதிகள் மறையச் செய்தவன்.

முத்தமிழ் கற்றவன் ‘குறளோ வியத்தை’
முக்கனிச் சாறாய் தந்தவன் — ஒரு
முத்தமிழ் அறிஞன் வித்தக கலைஞன்
மேதினி போற்றிட வாழ்பவன்.

தமிழ்மொழி தனது மூச்செனக் கொண்டு
தமிழை அரியணை ஏற்றிட — நம்
தமிழ்மொ ழியாட்சி தாயகம் கண்டிட
தன்னல மின்றிஉ ழைப்பவன்.

எழுபத்து ஆறாண்டு வாழ்ந்து முடித்து
எழுபத்து ஏழாண்டில் கால்பதித்து — ஒரு
பழுதற்ற சிந்தனை பாங்காய் பெற்றவன்.
பல்லாண்டு வாழட்டும் இப்பூமியில்.

— **கே.வி. ஜனார்த்தனன்,**

மாநில இணைச் செயலர், தமிழ்நாடு கலை ஆசிரியர் சங்கம்,
காஞ்சிபுரம்-2.

www.padippakam.com

# பயிற்றுமொழி :

## 'சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்'

## வலம்புரிஜான் அறிக்கை



வார்த்தைச் சித்தர்
வலம்புரிஜான்

திருவாரூர், மே. 24—

பயிற்றுமொழி பற்றி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று வலம்புரிஜான் கூறி உள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சிறந்த பேச்சாளருமான வலம்புரிஜான் ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது :-

தமிழ் வழிக்கல்விக்கு எதிரான சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு நகலை தீயிட்டுக் கொளுத்தி தங்களது மொழி உணர்வை வெளிப்படுத்தி இருக்கிற சென்னை சட்டக் கல்லூரி மாணவர்களை பெரிதும் பாராட்டுகிறேன். அடுத்தடுத்து நடக்கப் போகிற தமிழ் காக்கும் போராட்டத்தில் மாணவர்களின் அணிவகுப்பு முதலாவதாக நடைபெற்றுள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள தமிழ் மாணவர்கள், தமிழ்ப் பற்றாளர்கள் தங்கள் எதிர்ப்புணர்ச்சியை கட்டுக் கோப்பாக ஆனால் உறுதியாக காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் பயிற்று மொழிக்கு எதிரான வழக்கு நடைபெற்ற போதே எங்கள் இதயங்கள் தென்னை இலைகளாக கிழிந்தன. வாதங்களை கேட்ட பிறகு முடிவெடுக்க வேண்டிய நீதிபதிகள் வாதங்களை எடுத்து வைத்தவர்களை எதிர்க்கட்சி வழக்கறிஞர்களைபோல மடக்கினர். வேறெந்த வழக்கிலும் நடக்காத அநியாயம் இதுவாகும். திருவாளர்கள் என்.டி. வானமாமலை, சந்துரு, காந்தி, செந்தில்நாதன் என்று பலருடைய வாதங்களை அலட்சியப்படுத்திய நீதிபதிகள் எனது வாதத்தை நான் எடுத்து வைத்த போது என்னவெல்லாம் சொல்லி அதைத் தடுக்க வேண்டுமோ

படிப்பகம்

அப்படித் தடுத்தார்கள். ஆங்கிலத்தை ஒரு மொழியாக படிப்பதை எவ
எதிர்க்கவில்லை. ஆங்கிலத்தை பாட மொழியாக வைத்தால் ஆங்கில
வராது, பாடமும் வராது. காந்தியடிகளும் கவியரசர் தாகூரும் தேர்
கல்வியாளர்களும் எடுத்து சொன்னதைத் தான் நாங்களும் சொ
வருகிறோம்.

ஆங்கில வழிக்கல்வி நிலையங்களில் நடைபெறுகிற விழாக்க
அதிகமானவிழாக்களுக்கு தமிழ்நாட்டிலேயே அழைக்கப்படுகிறவர் நான்தா
இங்கெல்லாம் நான் கண்ட உண்மை என்னவென்றால் இங்கே பல ஆங்
வழி பள்ளிகளில் சொல்லித் தரப்படுவதற்கு பெயர் ஆங்கிலம் அல்
வயிறு வளர்க்கிற பல தொழில்களில் நர்சரிப் பள்ளிகள் ஒரு தொழில
விளங்குகின்றன. ஆகவே தான் அங்கீகரிக்கப்படாத நிலையில் 12 ஆயி
திற்கும் மேற்பட்ட பள்ளிகள் உள்ளன. இங்கு ஆசிரியர் அல்லாதவரு
தரப்படுகின்ற சம்பளமே, இவைகள் எவ்வாறு கல்வி நிலையங்கள் இல்ல
காசு பண்ணுகிற கடைகளாக உள்ளன என்பதை எடுத்துக் காட்டும்.

நமது மாணவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோ
சோவித்து நாட்டிற்கு செல்கிறார்கள். அங்கே சென்று ஓராண்டில் ர
மொழியை கற்று அதன் வாயிலாக மருத்துவ அறிவியலை பயிலுகிறார்க
இருபது வயதில் இளைஞர்களுக்கு இது சாத்தியம் என்றால், 'ஏ ப
ஆப்பிள்' என்று ஒன்றாம் வகுப்பிலேயே ஆங்கிலம் படிக்கத் தொடங்கு
அறியாமை அல்லாமல் என்ன? இருபது லட்சம் தமிழர்கள் மும்பை
இந்தி பேசுகிறார்களே அவர்கள் எந்தப் பள்ளியில் படித்தவர்கள்? எ
நாட்டிலாவது தங்களது தாய்மொழியை விட்டுவிட்டு வேறு ஒரு மொழி
பாடம் படிப்பார்களா? உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மாண
கள், அரசியல் கட்சிகள், தமிழ உணர்வாளர்கள் அனைவரும் ஒன்று தி
வேண்டும்.

6

தமிழக அரசு சட்டப் பேரவையில் பயிற்று மொழி தீர்மானத்
நிறைவேற்ற வேண்டும். அதைப்போலவே தவறான வகையில் ப
பண்ணுகிற நோக்கத்தில் நடத்தப்படுகிற அனைத்து ஆங்கிலவழி பள்
களையும் அரசே முன்வந்து மூட வேண்டும். நீண்ட போராட்டத்
தொடக்கமாக இந்த நிகழ்வுகள் அமையட்டும்.

இவ்வாறு வலம்புரிஜான் தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

# இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்

சேலம், மே. 18—

திருவள்ளுவராண்டு 2031 வைகாசித் திங்கள் 5-ம் நாள் (18-5-2000) அன்று இளங்கோவடிகள் இலக்கிய மன்றத்தின் தொடக்க விழா சேலம் அம்மாப்பேட்டையில் உள்ள பெரியார் திருமண மண்டபத்தில் மன்றத் தலைவர் **நா. ஜோதீஸ்வரி** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பாவலர் **தாரை. குமரவேல்** முன்னிலை வகித்தார். திருமதி. **அம்புஜம் முராரி** தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி-னார்கள். கவிஞர். **செ. சந்திரசேகரன்** அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் ‘படைப்பாளர் பேரவைத் தலைவர்’ பாவலர் **ழ்ஞாயிறு**, புலவர் **வேள்நம்பி**, வழக்கறிஞர்கள் **பி.சி. குழந்தைவேலு**, **முருக. மாணிக்கம்**, சேலம் தமிழ் ன்றத் தலைவர் **வ. முத்துமாரியப்பன்**, புலவர் **முராரி**, திருமதி. **சு. திலகவதி**, நாமக்கல் சங்க இலக்கிய மன்றத் தலைவர் கவிஞர். **கு. சக்கரபாணி** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் **பி. பிரிட்லிஸ்** நாட்டியம் ஆடினார்.

விழாவில் சிறப்புப் பேச்சாளராக சேலம் சங்க இலக்கிய ன்றத் தலைவர் முனைவர் **கு. இந்திரசித்து** அவர்கள் ன்றத்தை தொடங்கி வைத்து, ‘இளங்கோவடிகள் படைத்த ண்ணகி’ என்றப் பொருள் குறித்து சிறப்புரை ஆற்றினார். ட்ட நிறைவில் செல்வி **கோ. அருள் சத்தியா** அனை-ருக்கும் நன்றி கூறினார்.

முகவரி :

112, அங்காடித் தெரு, அம்மாப்பேட்டை, சேலம்-3.

படிப்பகம்

இலக்கிய செய்தி :- www.padippakam.com

# 'கொடுமைகளை அகற்றும் மருந்தாக படைப்புகளை தாருங்கள் எழுத்தாளர்களே!'

மதுரை, மே 20-

''சமூகக் கொடுமைகளை நீக்கும் மருந்தாக எழுத்தா களின் படைப்புகள் அமைய வேண்டும்'' என திராவிடர் கழ பொதுச் செயலர் கி.வீரமணி கேட்டுக் கொண்டார்.

மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு முற்போ எழுத்தாளர் சங்கத்தின் வெள்ளி விழா மாநாட்டில் அ பேசியதாவது :

எப்படியும் எழுதலாம் என்ற சூழலில், இப்படித்த எழுத வேண்டும் என்ற இலக்கோடு கடந்த 25 ஆண்டுக முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தினர் செயல்படு பாராட்டுக்குரியது. சாதி, மதம், பதவிபோதை என்ற கொ நோய்களை ஒழித்திடும் மருந்தாக எழுத்தாளர்களின் படை கள் இருக்க வேண்டும். தற்போது நடைபெறுவது வரலா புரட்டல்களின் காலம். இதைத் தடுத்து திருத்திட முற்போ எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புகள் கிளர்ந்தெழ வேண்

மத சார்பின்மையற்ற நமது நாட்டில் தற்போது மதம், ஒரே மொழி, ஒரே கலாசாரம் என்ற பாசிசநிலை படுகிறது. ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் சார்புடைய அமைப்புகள் இப்பணியைத் தொடர்ந்து செய்கின்றன. இ கண்டிக்கவும், சுட்டிக் காட்டவும் நமக்கு உரிமை உள் சாதி, மத போதைகளுக்கு எதிராக மக்களிடையே விழிப்பு வை ஏற்படுத்திடும் வகையில் எழுத்தாளர்களின் படைப் அமைய வேண்டும் என்றும் கி.வீரமணி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்த சங்கத்தின் நிர்வாகிகளான நன்மாறன், நந்தலா ச. தமிழ்ச்செல்வன், [illegible], டி. செல்வரா டி. லெட்சுமணன், செந்தில்நாதன், காஸ்யப உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

விழா செய்தி :

# 'தமிழ் வட்டம்' அமைக்க உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை திட்டம்

சென்னை, மே 14-

'தமிழர்களை ஒன்றிணைக்கும் வகையில் தமிழ் வட்டங்களை ஏற்படுத்த உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை திட்டமிட்டு உள்ளது. என்று அதன் இயக்குநர் அழகப்பா ராம்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அந்த அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற தமிழ் மறை திருக்குறள் நூல் வெளியீட்டு விழாவில் அவர் பேசியதாவது :

அமெரிக்காவில் 10 ஆண்டுகளுக்கு முன் உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டில் திருக்குறள் இசை மலர் காமத்துப்பால் குறுந்தகடு வெளியிடப்பட்டது. தற்போது 'தமிழ் மறை திருக்குறள்' நூல் வெளியிடப்படுகிறது. மேற்கத்திய அறிவை, தமிழில் கொண்டு வர வேண்டும் என்பது எங்களது திட்டங்களில் ஒன்று இயற்பியல் குறித்த பாடங்களை ஆங்கிலத்தில் சிடி ராமில் வெளியிட்டு உள்ளார்கள் அதைத் தமிழில் 'டப்' செய்து வெளியிடத் திட்டமிட்டு உள்ளோம்.

கோவில்களில் வள்ளுவர் அறிவகங்களை ஏற்படுத்தியுள்ளோம். இதன்மூலம் கோவிலுக்கு வருகிறவர்கள் புத்தகங்களைப்படித்து அறிவை வளர்த்துக்கொள்ள முடியும் புதிதாகத் தொடங்க திட்டமிட்டுள்ள தமிழ் வட்டங்களில் திருவள்ளுவர்சிலையும் குத்துவிளக்கும் வைக்கபட்டிருக்கும் அங்கு அமைக்கப்படும் நூலகங்களில் தமிழில் வெளிவரும் சிற்றிதழ்கள் வாங்கி வைக்கப்படும். மதுரை, திருச்சியில் விரைவில் தமிழ் வட்டங்கள் தொடங்கப்படும்,

'தமிழ் உனது முரசாகும்; தமிழ் உனது கவசமாகும் என்றார் மதுரை காமராசர் பல்கலைக் கழக முதலாவது பட்டமளிப்பு விழாவில் அண்ணா அதற்கு உருவமாக தமிழர்களின் கலாசார விவரங்களைத் தொகுத்து சிடிராமில் வெளியிட உள்ளோம். இது தான் தமிழ்முரசு. இதுதான் தமிழின் கவசமாகும் நமது சமூகம் முகவரியைத் தொலைத்து விட்ட சமூகம். அந்த முகவரியைத் தேடித்தர முயற்சித்துள்ளோம் சாதி, சமய வட்டங்களைத் தாண்டி திருக்குறள் மூலம் மையப்படுத்தி தமிழர்கள் இணைய வேண்டும் அதற்குத் தேவைப்படும் குறியீடு திருக்குறள் என்றார் அழகப்பா ராம் மோகன்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்மறை திருக்குறளையும் தமிழப்பன் பாட்டுக் கூறுகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் அழகிய தாளில் வெளியிட்டு திருக்குறளு மணிமகுடம் சூட்டியுள்ளது உலகத்தமிழ்மொழி அறக்கட்டளை பக்கங்கள் கொண்ட உயர்தர பைபிள்தாளில் அழகிய அச்சு அமைப்ப உருவாக்கப்பட்ட இந்தநூலின் விளிம்புகள் அசல்தங்கத்தால்முலா பட்டவை. திருக்குறளின் மூலம். பேராசிரியர் பி. எஸ் சுந்தரத் ஆங்கில மொழிபெயர்ப் பேராசிரியர் தமிழண்ணலின் தமிழ் விளக்க இசைக்குறிப்புடன் திருக்குறள் வழிபாட்டு மந்திரங்களும் இந்நூ இடம் பெற்றுள்ளன. சிறுவர், சிறுமியர் படிப்பதற்கு ஏற்ப திருவள்ளு வாழ்க்கை வரலாறு படக்கதை இடம் பெற்றுள்ளது. திருக்குறளின் அதிகார கருத்துக்கள் மணியன் செல்வனின் தூரிகையில் ஓவியங்க உயிர்பெற்றுள்ளன.

தமிழ்பண்பாட்டுக் கூறுகளை விளக்கும் கட்டுரைகள் தமிழ ஆங்கிலத்திலும் இடம்பெற்றுள்ளன. தமிழர்களின் பழங்காலச் சிற யும் எதிர்காலத்தில் எவ்வாறு தமிழன் முன்னேற வேண்டும் என்பதை சுட்டிக்காட்டும் தமிழ்ப்பண்பாட்டுக் கையேடாக இது திகழ்கிறது. சி முதல் பெரியவர் வரை அனைவரும் படிக்கும் வகையிலும் தமிழ் அறி மற்றவர்களும் திருக்குறள் மற்றும் தமிழ்பண்பாட்டுப் பெருமை புரிந்து கொள்ளும் வகையிலும் இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. உணர்வு கொண்ட பலரின் 10ஆண்டு கால உழைப்பு ரூ.60இலட்சத் மேற்பட்ட நிதி பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் மற்றும் ஆர்வலர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றால் இந்நூல் வெளிவரு சாத்தியமாகியுள்ளது என்று முன்னதாக நடந்த பத்திரிகைய கூட்டத்தில் தெரிவித்தார்.

ரூ. 800மதிப்புள்ள இந்நூல் ரூ. 600க்கும், ரூ 200 மதிப்புள்ள நாட்கா ரூ.100க்கும் விழா அரங்கில் கிடைக்கும் என்று அறக்கட்டளை இந்திய ஒருங்கிணைப்பாளர் தமிழப்பன் தெரிவித்தார்.

'தமிழ்மறை திருக்குறள் நூலை பிரதமரின் அறிவியல் ஆலோ ஏ. பி ஜே அப்துல்கலாம் வெளியிட, அதன் முதல் பிரதியை கேரள உள்ள திருவள்ளுவர் ஞானபீட மடபதி சிவானந்தர் பெற்றுக்கொண் உலகத் தமிழ்மொழி அறக்கட்டளையின் இந்திய ஒருங்கிணைப்ப தமிழ்ப்பன் வரவேற்றார். இந்த நூல் வெளியீட்டில் ஒத்துழைப்பு பேராசிரியர் தமிழண்ணல், மறைந்த பேராசிரியர் பி. எஸ். சுந் சார்பில் அவரது மனைவி பத்மாசுந்தரம் தமிழ்வளர்ச்சித்துறை முன் உதவி இயக்குநர் ஆர். நடராஜன் உள்ளிட்டோர். விழாவில் கெள கப்பட்டனர். விழாவின் தொடக்கத்தில் திருக்குறள் இறை வழிப நிகழ்ச்சி நடைபெற்றது

படிப்பகம்

கோரிக்கை செய்தி.

www.padippakam.com

# ''பட்டுக்கோட்டையாரின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும்''

சென்னை, மே-18-

''சென்னையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாகத் தமிழக அரசு ஆக்க வேண்டும்; அவரது பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடவேண்டும்'' என மக்கள்கவிஞர்பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அறக்கட்டளைத் தலைவர் மே.ரூஸ்வெல்ட் கோரிக்கை விடுத்தார்.

அசோக் நகர் வட்டார நூலக வாசகர் வட்டம், இந்த அறக்கட்டளை சார்பில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 71வது பிறந்த நாள் விழா, சென்னை அசோக் நகர் வட்டார நூலகத்தில் கொண்டாடப் பட்டது. புதிய நூலக உறுப்பினர்களாகச் சேர்ந்த பள்ளி மாணவ-மாணவிகளுக்கு உறுப்பினர் அட்டைகளைச் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் சா. கணேசன் வழங்கினார்.

கல்யாணசுந்தரத்தின் மகனும், ஆளுநர் மாளிகையின் மக்கள் தொடர்பு அலுவலருமான க. குமாரவேலுக்குக் கணேசன் பொன்னாடை அணிவித்துப் பெருமைப்படுத்தினார்.

விழாவில் கலந்து கொண்டவர்களின் பேச்சு :

தலைமை வகித்த ரூஸ்வெல்ட் :

5-வது ஆண்டாக இவ்விழாவை நடத்துகிறோம். கல்யாண சுந்தரத்தின் பெயரில் விருதுகளை அரசு வழங்க வேண்டும்; பாடநூல்களில் அவரது பாடல்கள் இடம்பெற வேண்டும். அவரது பாடல்களைக் கொண்ட மலிவு விலைப் புத்தகங்களை விரைவில் வெளியிட உள்ளோம். நூலகங்களில் அவை இடம் பெற வேண்டும்,

நூலக ஆணைக்குழுத் தலைவர் சா. கணேசன் :

எம். ஜி. ஆர் புகழ் பெறுவதற்கும் ஆட்சிக்கு வருவதற்கும் கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் உதவின.

சட்டப்பேரவை உறுப்பினர் ஏனாதி பாலசுப்பிரமணியம் :

ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் வேதனைகளை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் கல்யாணசுந்தரம். இங்கே அறக்கட்டளைத் தலைவர் விடுத்த கோரிக்கைகளை முதல்வரின் கவனத்துக்கு எடுத்துச்செல்வேன் என்றார்.

படிப்பகம்

© 25437



# தாகூர் மெட்ரிகுலேசன் பள்ளி

## தாகூர் பயிற்சிப் பள்ளி

1, சங்கர மடம் சாலை, □ மேல 6-ம் வீதி,

புதுக்கோட்டை.

□ □ தரம் நிறைந்த கல்வி

★ ★ நியாயமான கட்டணம்

● ● நன்கொடை இல்லை

★ அட்மிஷன் நடைபெறுகிறது.

● LKG, UKG to VII Std.

பொன். தங்கராசு M.A,M.Ed.,
முதல்வர்.

www.padippakam.com

www.padippakam.com

# சேலம் கலை இலக்கிய மன்றம்

## நூல் வெளியீட்டு விழா - பட்டிமன்றம்

சேலம், ஜுன். 11—

சேலம் கலை இலக்கிய மன்றத்தின் நூல் வெளியீட்டு விழா பட்டிமன்றம் (11-6-2000) மாநகராட்சி தொங்கும் பூங்காவில் நடைபெற இருக்கிறது.

செந்தமிழ் செல்வர் சோலை இருசன் தலைமை தாங்குகிறார். கவியிசைத் தென்றல் திருமதி முல்லை மாணிக்கம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட, கவிஞர் க சக்கரபாணி வரவேற்புரை ஆற்றுகிறார்.

மனிதநேயப் பாவலர் எழுஞாயிறு தொடக்கவுரை நிகழ்த்துகிறார் சேலம் ஆறுமுகன் எழுதிய காத்திருக்கும் மலர்கள் எனும் புதின நூலை வணக்கத்திற்குரிய மாநகர மேயர் டாக்டர் ஜி. சூடாமணி வெளியிடுகிறார்

டாக்டர் ராம்கமால், டாக்டர் சி. கந்தசாமி, சினி டைலர் ஏ எம். இராஜா, வீ. கிருஷ்ணன், டாக்டர் கோ.ஸ்ரீ. சீனிவாசன், மாரிமுத்து, மா. தன்ராஜ், பழ. இராமய்யா, சண்முகவல்லி செந்தில்குமார், சு. சேதுபதி, ப. சக்கரபாணி, நிதி நிறுவனர் ஏ. ரங்கநாதன், வினோத் குமார் ஆகியோர் நூலை பெற்றுக் கொள்கிறார்கள்.

பொற்கவிக்கோ நாமக்கல் நாதன் ஆய்வுரை நிகழ்த்துகிறார். தாரை. குமரவேல், வழக்குரைஞர் இரா. முருக மாணிக்கம், கே.கே. திருமால்ராவ், வை. அருள்மொழி, கவிதாலயா சந்திரசேகர், புலவர் அண்ணாமலை, செ.சி. இளந்திரயன், அரிமா ச. மாதவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

சேலம் ஆறுமுகனின் சிறுகதைத் தொகுதி நூலான தேன்சிந்தும் மலரல்லவோ...! அடுத்த படைப்பாக வெளியிடப்படுகிறது.

பெரிய தம்பி, கண்ணெதிரே தோன்றினாள், சந்தித்த வேளை, ஜென்னு திரைப்பட இணை இயக்குநர் சே.அ. அபிராமமூர்த்தி நூலை வெளியிட்டுப் பேசுகிறார்.

படிப்பகம்

ஆடிட்டர் ஆர். இராதாகிருஷ்ணன், பேராசிரியை ப. பிரபாதே
பாலா சிதம்பரம், மா. குப்புசாமி, ஓமலூர் சின்ராஜ், தங்க. சுருளிவே
கோ வெங்கடேசன், நேரு திருவேங்கடம், பூபதி, டி. பாஸ்
சுகுமார், செவ்வை ஆறுமுகம், மேச்சேரி இராஜா, மொசைக் ராஜ
ஆட்டோ இராஜா, கவிஞர் பெ. இராஜசேகர், நதிநீர் ஜனார்த்தன
பி.எல். முருகன் ஆகியோர் நூல் பெற்றுக் கொள்கிறார்கள்.

இலக்கியப் பறவை வழக்குரைஞர் பி.சி. குழந்தைவேலு நூல
ஆய்வு செய்து பேசுகிறார்.

கவிஞர் சி டி. சாமி, நாவலாசிரியர் முகவியன், வ. முத்
மாரய்யன், அன்னையன்பன், புலவர் ந. முராரி, தாதை உபதே
வெண்புறா கதிர்வேலு, புலவர் சீனிராமநாதன் ஆகியோர் வாழ்த்து
வழங்குகிறார்கள்.

மேற்கண்ட இருநூலின் ஆசிரியரான சேலம் ஆறுமுகன் ஏற்பு
நிகழ்த்துகிறார். மா. வெங்கடேசன் நன்றி நவில்கிறார்.

இந்நிகழ்ச்சிகளை தொடர்ந்து 'இன்றைய சமுதாயத்திற்கு நெ
யூட்டுவது இலக்கியமா? திரைப்படமா?' எனும் தலைப்பில் இலக்கியத்தே
முனைவர் க. இந்திரசித்து நடுவராகக் கொண்டு பட்டிமன்றம் நடக்கிற

திரைப்படமே என்ற அணியில் சேலம் செல்லய்யா, மா. கவு
பூபாலன், சுடரொளி, பா.சு. தமிழடியான், கி. சரவணகும
ஆகியோரும் இலக்கியமே என்ற அணியில் சேலம் தமிழமுதன், கே.
சித்துராஜ், முல்லை மாணிக்கம், சூர்யநிலா, கோனூர் வைரம
ஆகியோரும் வாதிடுகிறார்கள்.

உணர்ச்சித் தமிழிசைத் தென்றல் புக்குளம் த. துரையரசனி
இன்னிசைக்குப் பின் ஆ. தமிழரசுவின் நன்றியுரையோடு விழா நிகழ்ச்சிக
யாவும் நிறைவுறுகின்றன.

தொடர்புக்கு :

**சேலம் கலை இலக்கிய மன்றம்,**
45-1, நாராயணசாமித் தெரு, சேலம் - 7.
© 411476.

---

**ஏழைதாசன்**
● ஆண்டுச் சந்தா : ரூ. 35/-
● ஆயுள் சந்தா : ரூ. 350/-
✶ 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002.

## மறந்துப் போனவை

www.padippakam.com

நீண்ட இடைவெளிக்குப் பின்
பித்தளைக் குடம் அடகு போனது

வழக்கம்போல்
மாப்பிள்ளையோடு ஆறேழுபேர்
ஒவ்வொருவரும்
பேஷ்... பேஷ்... பில்டர் காப்பியா?
பஜ்ஜியில் உப்புக் கொஞ்சம் கம்மி - என்ற
வழக்கமான வசனத்தோடு.

லட்டர் போடுவதாய்
கையூன்றி எழுந்து கிளம்ப...

ஏழு வருஷத்திற்கு முன்
இதே தோரணையில் வந்து
ஏதோ விபத்தில் செத்தவள்ாய்
'பழக்கமாகி விட்டதெனக்கு...'

இந்த
ஆண்களெல்லாம் இப்படித்தான்
இறந்து போன பின்பும்
'யாரையாவது அழ வைத்துக்கொண்டு...

அ. சையாத்அலி,
பெருந்துறை, ஈரோடு.

படிப்பகம்

www.padippakam.com

# எய்ட்ஸ் நோயா? பயம் வேண்டாம்!

...ய்ட்ஸ் தீர்க்க முடியாத ஒரு நோய் அல்ல. சித்த மருத்துவத்தில் குணமாகிறது. எய்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்ட மருத்துவச் ...களுடன் வர வேண்டும்.

**நோயின் தன்மையைப் பொருத்து 100 முதல் 200 நாட்கள் வரை மருந்துகள் சாப்பிட வேண்டும். நடமாட்டம் இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்.**

...I.V. கிருமிகள் முழுமையாக அழிக்கப்படும் வரை சிகிச்சை அளிக்கப்படும். மருந்துகள் சாப்பிட்டு முடித்த பின்பு ...'ஆன்டிஜென்டெஸ்ட்' என்ற ரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவும். நெகட்டிவ் ஆக மாறும். இப்பரிசோதனை ...யே போதும். வெஸ்ட்ரன் பிளாட் பரிசோதனையில் நெகட்டிவ் ஆக வேண்டுமென்று விரும்புபவர்கள் தொடர்ந்து ...லம் மருந்துகள் சாப்பிட வேண்டும்.

...ருத்துவத் துறையில் 45 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக ...பணியாற்றியவர். 73 வயது நிரம்பியவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ் நோய் பிரிவிற்கு' மதுரை மாவட்டத்திற்குத் ...வராய் இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்குச் சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர்.



சித்த மருத்துவ மேதை :

## அரிமா டாக்டர் A.தேவராஜன், R.M.P.(IND)C.B.I.M.

"எய்ட்ஸ் நோய் ஒழிப்பு மருத்துவ மையம்" 7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் - 625 703.

(மனோன்மணி ஆஸ்பத்திரி) மதுரை மாவட்டம் போன் : 04549 - 25695

குறிப்பு : பேரையூரில் 7-3/125, பெருமாள் கோவில் தெருவில் மட்டுமே எனது மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேறு எங்கும் கிளைகளோ, ஏஜெண்டுகளோ கிடையாது. தரகர்கள் யாரும் என் பெயரைச் சொல்லி அழைத்தால் ஏமாந்துவிடாதீர்கள். ஆட்டோ டிரைவரிடம் 'மனோன்மணி ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னால் அழைத்து வந்து விடுவார்கள்.

**மருத்துவ ஆலோசனைக்கும், பதிவிற்கும் கட்டணம் ரூ.25/- கட்டணமின்றி வரும் கடிதங்களுக்கு பதில் வராது.**

...ரையூர் வருவதற்கு வழி : மதுரை To சாப்டூர் பஸ் மார்க்கத்தில் பேரையூர் உள்ளது. வடக்கிலிருந்து வருபவர்கள் ...

R.C. No. 22449 / 98 ★ Postal Regd. No. PMG/CR/02/2000/PDK
www.padippakam.com

## ஆசிரியர் செய்தி

### இதழ் எண் : 78

கடந்த ஐந்து மாதங்களாக ஏழைதாசன் இது வரை எப்போதுமில்லா துயரத்தோடு பயணித்திருக்கிறது. 31.12.1999 அன்று தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் அனைத்துச் சிறுபத்திரிகைகளுக்கும் அஞ்சல்துறை ஒரு கடிதம் அனுப்பி, 'உங்களது பத்திரிகையில் 50 சதவீதம் செய்தி இல்லாததால் அஞ்சல் சலுகை ரத்து செய்யப்படுகிறது என தடாலடி உத்தரவு பிறப்பித்தது. அதன் பின் நமது இதழ் ஒன்று அனுப்ப ரூ1-/ செலவாகி ஐந்து மாதத்தில் கைப்பொருளெல்லாம் கரைந்து விட்டது. எனினும் நமது தீவிர முயற்சிக்குப் பிறகு 25-05-2000 அன்று அஞ்சல் சலுகைக்குரிய உத்தரவு வழங்கப்பட்டு, இவ்விதழ் சொல்ல -வொண்ணா துயரத்தைத் தாங்கி உங்கள் முன் முகிழ்க்கிறது. அஞ்சல் சட்டவிதிப்படி கதை, கட்டுரை, துணுக்கு, நகைச்சுவை, கேலிச்சித்திரம் ஆகியன Articlesல் அடங்கும். இவைகளை தாங்கி (வார, மாத) வருவது தான் பருவ இதழாகும். இது தெரியாத அரசு உயர் அதிகாரிகள் தினசரிகளில் உள்ள செய்திகளைப் போல் பருவ இதழ்களில் தேடிப்பார்த்து இவையெல்லாம் செய்தி இல்லை என்பது என்ன நியாயம்? மேலே உள்ள "கவிஞர்" அரசாங்கமும், கீழே உள்ள "கலைஞர்" அரசாங்கமும் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

## வாசகர் வட்டச்செய்தி

### கவிப்பேரரசு கவனத்திற்கு......

இரண்டு இதழ்களும் வந்தது. நன்றி. உவமைச்சிக் கவிஞா சிங்கார வேலனை அட்டைப் படத்தில் வெளியிட்டு பெருமைப்படுத்தியமைக்கு நன்றி. துணை மேயர் என்ற சொல்லை 'மாநகரத் துணைத் தந்தை' என்று சொல்வதில் தவறில்லை. ஆங்கிலச் சொல்லை அனுமதிக்கலாம் என்ற அவல நிலையின் காரணமாக 'பஸ்ஸ்டாண்டு' என்றால் தமிழ் என்று கூறும் அளவுக்கு போய் விட்டோம். முடிந்தவரை பிறமொழிச் சொற்களை தவிர்ப்பதே தமிழுக்கு செய்யும் பெரும் தொண்டாகும். கவிப் பேரரசு சொன்னாலும் தவறு தவறு தான். பொற்கோ கருத்து தமிழருக்கு பெருமை சேர்த்தது. மே இதழில் பெரியார் தொண்டருக்கு. கொள்கை வழி நடக்கும் இலட்சிய வீரருக்கு செய்த கௌரவம் சிறப்பு. அற்புதங்கள் நடக்கலாம். ஆனால்...... அடுத்தவரிதான் சரியான முத்திரை. தமிழ் மறவன் கவிதை இன உணர்வு தந்தது.

-கவிஞர். இரா. இரவி.
மதுரை - 1.

ஏழைதாசன் அச்சகத்தில் அச்சிட்டு,
வெளியிடுபவர், ஆசிரியர் : எஸ். விஜயகுமார்
முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002, தமிழ்நாடு.
படிப்பகம்